# DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் புதன்கிழமை 12ம் நாள் சாட்சியாகிய வின்சன் பால்ராஜ் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வின்சன்பால்ராஜ் | வயது | 31 |
| த/பெ. | ஜெம்ஸ் | இனம் | ஆண் |
| கிராமம் | அரக்கோணம் | தொழில் | சொந்த தொழில் |
| சமயம் | | தாலூக்கா | |

**C.C. 37/2024**

(1, 2 எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை.)

**முதல் விசாரணை 12.03.2025 அ.சா.2**

1. நான் அரக்கோணத்தில் வசித்து வருகிறேன்.அ.சா.1 பால்தினகரன் எனது சகோதரர். 24.04.2022ம் தேதி காலை 11.30 மணிக்கு சரவணன், ராமு என்பவருக்கு இடையே ஒப்பந்த பிரச்சனை சம்மந்தமாக பஞ்சாயத்து பேசினோம். அப்போது எனது தம்பி அரக்கோணம் இரயில்வே நிலையத்திற்கு சென்றபோது இரயில்வே மருத்துவமனைக்கு பக்கத்து தெருவில் எனது தம்பியை, விக்கி, சுரேந்தர் கட்டையால் அடித்தார்கள்.

2. எனக்கு போன் மூலம் தகவல் கிடைத்து நான் எனது தம்பியை அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றேன். நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள வெள்ளை சட்டை, பிரவுன் நிற பேன்ட் அணிந்த நபர் சுரேந்தர், வெள்ளை சட்டை, சிமெண்ட் பேன்ட் அணிந்த நபர் விக்கி. மேற்படி நபர்கள் தான் என் தம்பியை தாக்கினார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

3. எதிரிகள் ஆஜராகி குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

மறு விசாரணை : இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.
Sd/- K.Ramkumar.,M.L.,
Judicial Magistrate No.I,
Arakkonam.